அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 21/2023 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 16.02.2026

பெயர் முனுசாமி தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

1,2,4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-

1, எனது தந்தை வேனுவிற்கு மொத்தம் ஜெயலட்சுமி, வெங்கடேசன் மற்றும் நான் வாரிசுகள் ஆவோம். காணாமல் சென்ற ஜெகதீசன் வேனு மச்சான் உறவு முறை ஆவார். ஜெகதீசன் என்பருக்கு திருமணம் ஆகவில்லை. அவர் தாம்பரம் அரசுமருத்துவமனையில் 2012 வருடம் 8 வது மாதம் சிகிச்சைகாக உள்நோயாளியாக இருந்தார் அங்கிருந்து 23.08.2012 அன்று காணாமல் சென்றுவிட்டார். நாங்கள் எங்கு குடியிருந்தோம் என்றால் கள்ளிகுப்பம் ஆகும். அங்கு அரசு மருத்துவமனை இல்லையா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை புகாரை யார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன்.

2, இந்த வழக்கில் என்உடன்பிறந்தவர்களை ஏன் கட்சியாக சேர்க்கவிலலை என்றால் அவர்கள் அதைபற்றி கேட்கவில்லை. ஜெகதீசனுக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் உள்ளார்களா என்றால் எனது அம்மா உடன்பிறந்த அக்கா ஆவார். எனது மனுவில் எனது அம்மா தான் ஜெகதீசன் அக்கா என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மாவிற்கு உடல்ரீதியான மருத்துவபிரச்சனைகள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அம்பத்துூர் தாசில்தார் மற்றும் திருவள்ளுர் ஆட்சியருக்கு எனது தத்து தந்தை காணாமல் சென்றார் என்று மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாம்பரம் பகுதியில் காணாமல் சென்றதால் நான் வழக்கை அங்கு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வரையரை இல்லை என்றால் சரியல்ல.

<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜெகதீசன் என்பவர் Civil death சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். காணாமல் சென்றதாக சொல்லும் ஜெகதீசன் எங்கு வேலை செய்தார் என்றால் கட்டிடவேலை செய்தார். எங்கிருந்து காணாமல் சென்றால் என்றால் தாம்பரம் அரசுமருத்துவமனையில் 2012 வருடம் 8 வது மாதம் சிகிச்சைகாக உள்நோயாளியாக இருந்தார் அங்கிருந்து 23.08.2012 அன்று காணாமல் சென்றுவிட்டார். எதற்காக மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் TB சிகிச்சைகாக சேர்த்தோம். காணாமல் சென்றதை தாம்பரம் காவல்நிலையத்தில் உடனே தெரிவித்தேன்.

2. மருத்துவமனையில் சேர்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்கைவசம் உள்ளது. நான் ஜெகதீசன் என்பவருக்கு தாய்மாமன் உறவுமுறை ஆவேன். ஜெகதீசனை நான் தத்தெடுத்து வளத்தேன். நான் தந்தையாக தத்தெடுத்ததை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜெகதீசன் காணமல் செல்லும்போது அவருக்கு என்ன வயது என்றால் 60 வயது ஆகும். நான் பிராதில் 68 வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 60 வயது தான் சரியானது. காவல்துறை நடவடிக்கை எடுத்து ஜெகதீசனை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சான்று கொடுத்தார்களா என்றால் அவ்வாறு எதுவும் தரவில்லை.

3. எனக்கு வழக்கு விவரம் சரியாக தெரியவில்லை என்றாலும் வழக்கு நிருபிக்கும் ஆவணங்கள் சரியாக தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.